*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(1), 2020*

***நூல் மீளாய்வு:***

Wilson. A.J. (1980). *The Gaullist System in Asia: The Constitution of Sri Lanka (1978)*. UK: Palgrave Macmillan. ISBN: 978-1-349-04922-6, pp. 1-218

**எம்.ஏ.எம். பௌசர்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**அரசியல் விஞ்ஞானத்துறை**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Correspondence: fowsarma@seu.ac.lk

## 1. அறிமுகம்

*ஆசியாவில் கோல் முறை: இலங்கையின் அரசியல் திட்டம் (1978) எனும் தலைப்பிலான நூல், பேராசிரியர் அல்பிரட் ஜெயரட்ணம் வில்சன் என்பவரினால் எழுதப்பட்டதாகும். 1980 இல் முதல் பதிப்பினைப் பெற்ற இந்நூல், இலண்டன் மக்மில்லன் அச்சகத்தினரால் வெளியிடப்பட்டது. கனடாவின் நியூ புரூன்ஸ்விக் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் வில்சன் கடமையாற்றிய போது அவரால் எழுதப்பட்ட இந்நூல், இலங்கையின் 1978 ஆம் ஆண்டைய அரசியல் திட்டம் தொடர்பில் வெளிவந்த முக்கிய புலமைசார் நூல்களில் ஒன்றாக மதிக்கப்படுகின்றது. பேராசிரியரின் ஆங்கிலப் புலமையினை வெளிப்படுத்தும் விதத்தில் ஆங்கிலத்திலேயே வரையப்பட்டுள்ள இந்நூல், அது கொண்டிருக்கும் உள்ளடக்கங்கள் மூலம் நூலாசிரியரது அரசியல் புலமையினை வெளிப்படுத்துகிறது. 218 பக்கங்களில் வரையப்பட்டுள்ள இந்நூல், ஒன்பது பிரதான தலைப்புக்களின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.*

*இந்நூல் கோல் முறையின் தோற்றம், சமூக - பொருளாதார அமைப்பினுடைய அரசியல், அரசியல் திட்டத்தின் உருவாக்கம், நிறைவேற்று ஜனாதிபதி முறை, பிரதம மந்திரி, அமைச்சர்கள், பாராளுமன்றம் மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம், அடிப்படைச் சுதந்திரங்கள் மற்றும் மொழி தொடர்பான பிரச்சினை, நீதித்துறை மற்றும் பொதுச் சேவை என்பவற்றினை பிரதான தலைப்புக்களாகக் கொண்டுள்ளது. நூலின் முக்கிய பகுதிகளை விபரண நோக்கில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தியுள்ள நூலாசிரியர், முடிவுரைக்கு அடுத்ததாக நூற்களின் இறுதிப்பகுதியில் சேர்க்கப்படும் மேலதிக இணைப்பினையும் தனது நூலில் உள்ளடக்கியுள்ளார். இப்பகுதியில் நூலாசிரியர் ஜனாதிபதித்துவவாதம் தொடர்பிலான மீள் மதிப்பீடு ஒன்றினையும் மேற்கொண்டுள்ளார். தனது ஆய்விற்குப் பயன்படுத்திய உசாத்துணைகளின் விபரமான பட்டியல் ஒன்றினையும் ஆசிரியர் இந்நூலில் வழங்கியுள்ளார். நூலின் பின்னிணைப்பில் இலங்கையின் அரசியலில் அச்சமயம் காணப்பட்ட பிரதான செயற்பாட்டாளர்களின் விபரம், இலங்கையின் 1978 ஆம் ஆண்டைய இரண்டாம் குடியரசு அரசியல் திட்டம் தொடர்பாக நூலாசிரியர் எழுதிய கட்டுரை, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் திட்டத்தின் சில முக்கிய விடயங்கள் என்பன இணைக்கப்பட்டுள்ளன. இந்நூல் குறித்த திறனாய்வினை பின்வருமாறு நோக்கலாம்.*

## 2. நூல் பற்றிய திறனாய்வு

*வில்சனின் நூல் இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி முறை, அமைச்சரவை, பாராளுமன்றம், விகிதாசாரப் பிரதிநிதித்துவம், மக்கள் தீர்ப்பு, நீதித்துறை, பொதுச் சேவை மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்கான மக்கள் ஆணை என்பன போன்ற விடயங்களை ஆய்வு ரீதியாகப் பரிசீலிப்பதற்கான ஒரு முயற்சியாக உள்ளது. இந்நூலில் வில்சன் கவனம் செலுத்தியுள்ள விடயங்கள் குறித்து ஒரு கண்ணோட்டத்தினை மேற்கொள்வதன் மூலம் இந்நூலினைப் பற்றிய முழுமையான தெளிவினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.*

### *2.1 பயன்படுத்தப்பட்டுள்ள முறையியல்*

*வில்சன் இந்நூலில் தனது பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கு பயன்படுத்தியிருக்கும் முறையியலை நோக்குகின்ற போது, அவர் ஒப்பியல் மற்றும் விபரண ரீதியான பகுப்பாய்வு முறைகளைக் கையாண்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. அவர் தனது ஒப்பீட்டு ஆய்வில் செயல்நிலை ஒப்பீடு மற்றும் காரணிகளின் ஒப்பீடு ஆகிய விடயங்களைக் கையாண்டுள்ளார். அவர் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள இலங்கையின் அரசியல் திட்டத்தினை கோல்வாத முறைமையின் அடிப்படையிலானதாக நிருபிப்பதற்கு இவ்விரு முறைமைகளிலும் உள்ள அம்சங்களின் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளில் கவனம் செலுத்தியுள்ளமையானது அவர் ஒப்பீட்டு முறையினைக் கையாண்டுள்ளார் என்பதனை புலப்படுத்துகிறது. வெறுமனே பிரான்சின் கோல்வாத முறையுடன் மட்டுமன்றி இதர அதிகாரத்துவ*

முறையுடனும் இலங்கையின் அரசாங்க முறையினை இணைத்துப்பார்க்கும் நோக்கினை வில்சன் கையாண்டிருப்பதிலிருந்து அவர் ஒப்பியல் ரீதியான முறை ஒன்றினை தனது ஆய்வுக்குப் பயன்படுத்தியிருப்பது தெளிவாகின்றது. காரணிகளின் ஒப்பீடுகளிலும் வில்சன் கூடிய கவனம் செலுத்தியுள்ளதனைக் காணலாம். இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தின் உருவாக்கம், அதன் உருவாக்கத்திற்கு எதிராக எழுந்த விமர்சனங்கள் மற்றும் அதன் நடைமுறை ஆகிய விடயங்களில் வில்சன் இவ்வாறான காரணிகளின் ஒப்பீட்டினை மேற்கொண்டுள்ளார்.

வில்சனின் இந்நூல் சமூக விஞ்ஞானத்தின் பாற்பட்ட ஒரு நூல் என்றவகையில், இந்நூலில் விபரணரீதியான பகுப்பாய்வு முறையும் பரவலாக எடுத்தாளப்பட்டுள்ளது. இம்முறையின் கீழ் வில்சன் ஒரு விடயத்தினைத் துருவிக் கண்டறியும் விபரண ஆய்வு மற்றும் உறுதிப்படுத்தும் விபரண ஆய்வு முறைகளைக் கையாண்டுள்ளார். அரசியல் திட்டத்தின் பின்னால் உள்ள காரணங்கள் தொடர்பிலான அவரது பகுப்பாய்வில் துருவிக் கண்டறியும் ஆய்வு முறை எடுத்தாளப்பட்டுள்ளதுடன், ஒப்பியல் நோக்கில் அவர் கண்டுகொண்ட விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு என உறுதிப்படுத்தும் விபரண ஆய்வு முறையினை அவர் கையாண்டுள்ளார். இவ்வாறான ஆய்வு முறையியலைக் கொண்டு வில்சன் தனது ஆய்வினை மேற்கொண்டுள்ளமைக்கு இரண்டாம் நிலைத் தரவுகளே பெருமளவு பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி வில்சன் தனது ஆய்விற்கான தரவுகளை சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள், அவரது ஆய்வுடன் தொடர்பான விடயங்கள் குறித்து எழுதப்பட்ட நூல்கள், அரசாங்க வெளியீடுகள், 1979/80 காலப்பகுதியில் வெளிவந்த சஞ்சிகைகளில் இருந்தும் பெற்றுள்ளார்.

இவை தவிர, குறிப்பிட்ட துறைசார் புலமையாளர் என்றவகையில் தனது விமர்சன நோக்கிலான பார்வையினையும் தனது நூலில் பயன்படுத்தியுள்ளார். இவற்றுள் அப்போது வெளிவந்த டெய்லி நியூஸ் பத்திரிகை மற்றும் சோசலிச தேசம், கொமன்வெல்த் மற்றும் ஒப்பீட்டு அரசியலுக்கான சஞ்சிகை, ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனா ஆற்றிய உரைகளின் தொகுப்பு, சன்டே ஒப்சேவர், வேர்ல்ட் டுடே, லங்கா காடியன் ஆகிய முக்கிய பத்திரிகை மற்றும் சஞ்சிகைக் கட்டுரைகள் என்பன அடங்குகின்றன. வில்சன் தனது ஆய்விற்கு எடுத்துக் கொண்டுள்ள விமர்சன ரீதியான தரவுகளின் பெரும்பகுதி மேற்கூறிய கட்டுரைகளிலிருந்தே பெறப்பட்டுள்ளன. புத்தகங்கள் வரிசையில் ஜே.ஏ.எல். கூரே என்பவர் எழுதிய இலங்கையில் 'நிருவாகச் சட்டமும் அரசியலமைப்புச் சட்டமும்' என்ற நூலினையும் இதர சில நூல்களையும் பயன்படுத்தியுள்ளார். இப்பட்டியலில் அவர் எழுதி வெளியிட்ட 'இலங்கையின் அரசியல்: 1947 – 1979' என்ற நூலும் அடங்குகின்றது. அரசாங்க வெளியீடுகளில் பாராளுமன்ற வெளியீட்டினையும் விஷேட பிரச்சினைகள் பற்றிய சஞ்சிகையில் கே.எம்.டி. சில்வா பதிப்பித்த வரலாற்று மற்றும் சமூகக் கற்கைக்கான இலங்கைச் சஞ்சிகையினையும் பயன்படுத்தியுள்ளார்.

### 2.2 கோட்பாட்டு வரைபுச் சட்டகம்

இந்நூலிற்கான கோட்பாட்டு வரைபுச் சட்டகமாக வில்சன் பயன்படுத்தியிருப்பது அரசியலமைப்புச் சட்ட வடிவமொன்றினையாகும். இத்தகைய வடிவமாக அவர் தனது நூலில் அறிமுகப்படுத்தியிருப்பது ஜெனரல் டீ கோல் பிரான்சில் அறிமுகம் செய்த அரசியலமைப்புச் சட்டத்தினையேயாகும். அதாவது பிரான்சின் டீ கோல்வாத ஐந்தாம் குடியரசு அரசியல் திட்டமே இந்நூலுக்கான கோட்பாட்டு வரைபுச் சட்டகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் வில்சன் தனது கோட்பாட்டு வரைபுச் சட்டகத்தில் பிரான்சில் கோல்வாத முறைமையில் மட்டும் முழுமையான கவனத்தினைச் செலுத்தாது, தெளிவான ஒப்பீட்டு விமர்சனத்தினை மேற்கொள்வதற்காக ஏனைய ஜனநாயக மற்றும் அதிகாரத்துவ முறையின் பக்கமும் தனது கவனத்தினைச் செலுத்தியுள்ளார். இலங்கையின் புதிய அரசியலமைப்பின் தன்மையினை முழுமையாக விமர்சன நோக்கில் ஆராய்வதற்கு அவ்வாறானதொரு கோட்பாட்டு அடிப்படையினை புரிந்துகொள்வது அவசியமானது என்பதனாலேயே வில்சன் இவ்வாறான கோட்பாட்டு அடிப்படைகளை எடுத்தாண்டுள்ளார்.

வில்சன் தனது கோட்பாட்டு வரைபுச் சட்டகத்தில் உலகளாவிய ரீதியாக ஜனநாயகத்தின் காட்சிப் படுத்தலானது அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினருக்கான மொழி இணக்கப்பாடுகள், சுதந்திரமான நீதித்துறை, ஒம்புட்ஸ்மன் மற்றும் அதிகார வேறாக்கத்தின் தொழிற்பாடு என்பவற்றின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது என அவர் குறிப்பிடுகின்றார். இவ்வம்சங்களே எந்தவொரு குழுவும் சர்வாதிகாரத்திற்கு செல்வதனைத் தடுப்பதற்கான அம்சங்களாக இருக்கும் எனக் கருதியுள்ள வில்சன், சகல மட்டங்களிலும் இருந்து பெறப்படும் தேசிய இணக்கப்பாடுகளும் ஜனநாயகத்தின் முறையான காட்சிப்படுத்தலுக்கு அவசியமானது எனக் குறிப்பிடுகின்றார். அவ்வாறே அரசாங்கம் இன, சாதி, சமய, பிராந்திய மற்றும் வர்க்க அமைப்புக்களுடன் இணைந்து கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும். மக்கள் பங்குபற்றுதல், சமூகத்தின் அடிப்படைத் தேவைகள், மக்களின் அபிலாசைகள் என்பவற்றை அரசாங்கம் கருத்திற்கொள்ள வேண்டும் எனக் கருதும் வில்சன், இவ்விதமான ஜனநாயக அரசியல் முறையில் குறைந்தளவிலான அரசியல் கைதிகளே காணப்படுவர் எனவும், கால வரையறையற்ற காலத்திற்கு எவரும் கைதிகளாக்கப்படாத நிலை காணப்படும் எனவும் குறிப்பிடுகின்றார். இவ்வாறான அரசாங்க

முறையில் மோசமான தண்டனை முறைகள் மற்றும் துன்புறுத்தல்கள் என்பன தடைசெய்யப்பட்டிருக்கும். எனினும் இவையனைத்தையும் ஒருங்கே ஒரு அரசியல் முறையில் கொண்டுவருவது சிக்கலானது என்பதை நூலாசிரியர் ஏற்றுக்கொண்டுள்ளார். இத்தகைய விடயங்கள் அனைத்தும் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி என்ற ஒரு தனிமனிதனின் ஆற்றலிலும் திறமையிலுமே தங்கியிருக்கின்றது. இந்நபர் அழுத்தும் கருவியிலேயே ஆட்சியின் போக்கு தீர்மானிக்கப்படுகின்றது. இவ்வாறான முறையில் ஜனாதிபதி என்ற ஒருவரினால் மட்டுமே சமூக - அரசியற் சக்திகளின் இயக்கத்தினைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் வில்சன் குறிப்பிட்டுள்ளார்.

இத்தன்மையின் பாதிப்புக்குட்பட்டதாகவே இலங்கையின் உதாரணம் இருக்கின்றது என்பதே வில்சனின் அபிப்பிராயமாகும். இது தொடர்பில் பங்களாதேசின் இராணுவ ஆட்சியாளர்கள் இலங்கையின் அரசியல் திட்டங்களில் உள்ள நலன்களை சுட்டிக்காட்டியிருந்ததாகவும் வில்சன் குறிப்பிடுகின்றார். பங்களாதேசில் செய்க் முஜீபுர் ரஹ்மான் பிரதமராகப் பதவியேற்றதும் அது கிட்டத்தட்ட அமெரிக்காவின் ஜனாதிபதியின் நிலையில் வைத்துப் பார்க்கப்பட்டதையும் வில்சன் இவ்விடத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். பாகிஸ்தானின் ஸ்தாபகர் முஹம்மத் அலி ஜின்னா, லியாகத் அலி கானின் தலைமைத்துவங்களும் இவ்வாறுதான் பார்க்கப்பட்டன. இதையொத்த தன்மையே பிரான்சின் ஐந்தாம் குடியரசின் ஸ்தாபகர் டீ கோலின் நடத்தைகளிலும் வெளிப்பட்டிருந்தது. இதனை மேலும் நிரூபிக்க முற்படும் வில்சன், பிரான்சிய ஆட்சி பற்றிய பின்வரும் கருத்தினை மேற்கோள் காட்டியுள்ளார், இதன்படி பிரான்சின் ஆட்சியானது ''கேட்கப்படாமல் யாரும் பேசுவதில்லை என்பதுடன் ஜனாதிபதிக்கு எதிராக எந்த அபிப்பிராயத்தையும் யாரும் வெளிப்படுத்தாததாக இருந்தது'' எனக் குறிப்பிடுகின்றார். இதையொத்த போக்கினையே இலங்கையில் கண்டுகொள்ள முடிகின்றது என்பது வில்சனின் வாதமாகும்.

தென்னாசிய சூழலில் இத்தகையதொரு பிரான்சிய மாதிரியான ஜனாதிபதித்துவ முறையானது அதிகாரத்துவ அரசாங்கத்தினை நோக்கிய பாதைக்கு மேலும் வழிவிடும் எனவும் வில்சன் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய மாற்றத்திற்கு இந்தியா விதிவிலக்கானது அல்ல எனக் குறிப்பிடும் வில்சன், திருமதி இந்திரா காந்தி ஆட்சியில் இருந்த போது கோல் முறையிலான அரசாங்க முறையினை நோக்கிய நகர்வினை அவர் மேற்கொண்டிருந்ததாகவும் சுட்டிக்காட்டுகின்றார். இந்திரா காந்தி 1975 இல் அவரது அமைச்சரவையில் கபினட் அமைச்சராக இருந்த சரன் சிங் தலைமையில் இதற்கென ஒரு குழுவினை நியமித்திருந்ததாகவும், இக்குழு இந்திய அரசியல் திட்டத்தின் குறைபாடுகளைப் பரிசீலிக்கும் படி பணிக்கப்பட்டது எனவும் கூறுகின்றார். இக்குழு தனது சிபாரிசில் இந்தியாவின் பாராளுமன்ற முறையிலான ஆட்சி முறை மிகவும் மத்தியமயப்படுத்தப்பட்ட ஒரு ஜனாதிபதித்துவ முறையினால் இடமாற்றப்பட வேண்டும் எனக் கூறியதனையும் வில்சன் நினைவு கூறியுள்ளார்.

இந்தியாவில் இராஜ்ய சபாவில் ஒரு தடவை தோன்றிய திருமதி காந்தி ஜனாதிபதித்துவ முறை தொடர்பான சில ஆக்கங்களில் பாண்டித்தியம் உடையவராகக் காட்சியளித்தார் எனக் குறிப்பிடும் வில்சன், இந்தியாவில் பலமான ஜனாதிபதித்துவ அரசாங்கத்தினை வலியுறுத்திய மற்றொரு நபராக பண்டித் நேருவின் மருமகன் பீ.கே. நேருவினைக் குறிப்பிடுகின்றார். இராஜதந்திரியான இவர் கோல்வாத ஜனாதிபதித்துவ முறையில் நம்பிக்கை கொண்டிருந்ததாகவும் இலங்கையில் அம்முறை அறிமுகப்படுத்தப்பட்டமை குறித்து அவர் கருத்துவெளியிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். எனினும் பீ.கே. நேரு ஜனாதிபதி ஜே. ஆரின் குறிப்புக்கள் தொடர்பில் கூடிய தெளிவினைப் பெற்றிருக்கவில்லை எனவும் வில்சன் சுட்டிக்காட்டியுள்ளார். இதுவிடயத்தில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனா 1977 இல் தேசிய அசம்பிளியில் இம்முறையினை அறிமுகம் செய்த போது அழுத்தம் தெரிவித்து குறிப்பிட்ட விடயத்தினையும் வில்சன் மேற்கோள் காட்டியுள்ளார்.

ஜனாதிபதித்துவ மாதிரியிலான அதிகாரத்துவ அரசாங்கத்தினை இலங்கை மட்டுமன்றி, கிழக்கில் மலேசியா, மேற்கில் ஈரான் ஆகியவற்றில் இவ்விதமான பரந்தளவிலான அதிகாரத்துவ மாதிரியினை நோக்கிய அரசாங்கம் ஏற்படுத்தப்படுவதற்கு முயற்சிக்கப்பட்டதனையும் வில்சன் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை அரசியல் திட்டத்தின் குழந்தையான இவ்விரட்டை மாதிரியிலான அரசாங்க முறை அதனது சொந்தச் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் வாதிடுகிறார். இது இலங்கையில் மேற்கத்தேய அமைச்சரவை முறையின் தோல்வியினை நிரூபித்துள்ளது எனக் குறிப்பிடும் வில்சன், தெற்கு மற்றும் தென்கிழக்காசியாவில் உள்ள சில முன்னால் பிரித்தானிய குடியேற்றங்கள் மேற்கத்தேய மாதிரியிலான அரசாங்க முறையினை தொடர்ந்தும் பேணிவருகின்றதனையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ஜனாதிபதித்துவ முறையானது மரபுரீதியான ஜனநாயகத்திற்கும் நவீன அதிகாரத்துவ மாதிரிக்கும் இடைப்பட்ட முறையாகும் எனக் குறிப்பிடும் வில்சன், இது அபிவிருத்தியடைந்து வரும் பன்மைத்துவ சமூகங்களுக்குரிய மாதிரியாகவும் இருக்க முடியும் என அபிப்பிராயப்படுகின்றார். ஆனாலும் அது ஆசிய பொனபார்டிசத்தினைத் தோற்றுவிக்க முடியும் எனவும் தனது ஊகத்தினை வில்சன் வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் கோல் முறைக்கு செவிசாய்க்கும் அரசியல் திட்டக் கட்டமைப்பினை நிர்ணயிப்பதற்கான முதல் நிபந்தனையாக இருந்தது பலமான ஐக்கிய தேசிய அரசினை விருத்தி செய்வதும் சுதந்திர,

வலுவுள்ள ஜனாதிபதித்துவ முறையினை மேற்பார்வை செய்வதுமாகும். மற்றையது பாராளுமன்ற அமைப்பினைத் தொடர்ந்து பேணுவதாகும். அதனது பிரதான பணி குறிப்பிட்ட நலன்களை ஒன்று திரட்டுவதும் போட்டி போடும் நலக்குழுக்களுக்கிடையிலான முரண்பாடுகளைக் குறைப்பதுமாகும் எனக் குறிப்பிடும் வில்சன், இறுதியாக பிரஜைகளின் பங்குபற்றுதல் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும் என்கிறார். பிரதான நிறைவேற்று அதிகாரி வாக்காளர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தக் கூடியளவிற்கும், முக்கியமான கொள்கைத் தீர்மானங்களுக்கு மக்கள் தீர்ப்பினூடாக அவர்களது ஆலோசனைகளைப் பெறுவதற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவர் விபரிக்கின்றார். கோல்வாதம் பொருளாதார சுதந்திரத்தினையும் உள்ளடக்கியது எனக் குறிப்பிடும் வில்சன், இது ஒட்டுமொத்த முதலாளித்துவத்திற்கும் கூட்டுடைமைவாதத்திற்கும் இடையிலான மூன்றாவது வழியாகும் என்கிறார். இரண்டாம் குடியரசு அரசியல் திட்டம் இத்தராதரங்களை உறுதிப்படுத்துகின்றதா என்பதனைப் பரிசீலிப்பதற்காகவே வில்சன் இவ்வாறான கோட்பாட்டு வரைபுச் சட்டகம் ஒன்றினை தனது நூலில் கையாண்டுள்ளார்.

### *2.3 பகுப்பாய்வு*

வில்சன் தனது நூலில் மேற்கொண்டிருக்கும் புலமைசார் பகுப்பாய்வு என்பது இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டம் குறித்த பல்வேறு விடயங்களில் கவனம் செலுத்துவதாக உள்ளது. இதன்படி வில்சன் தனது முதலாவது அத்தியாயத்தில் கோல் முறைமையின் தோற்றத்தினை விபரிக்கின்றார். இவ்வத்தியாயத்தில் இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்திற்கான அடிப்படையினைப் பற்றி ஆராய்ந்துள்ள அவர், இவ்வரசியல் திட்டம் எந்த முறையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பதனையும் பரிசீலித்துள்ளார். அவர் இவ்வரசியல் திட்டத்தின் சிற்பியான ஜே.ஆர். ஜயவர்தனாவினை டீ கோல் போன்று நீண்டகால அரசியல் அனுபவம் கொண்ட இறுதி வரைக்கும் ஒரே கொள்கையில் நின்ற ஒருவராக அடையாளப்படுத்தும் அதேவேளை, அவரது கொள்கைக்கு பெரும்பான்மையானோரின் ஆதரவு இல்லாதிருந்தபோதிலும் தனது நோக்கினை அடைவதற்கு இறுதி வரை முயற்சித்ததாகக் குறிப்பிடுகின்றார்.

இவ்விதம் அவரது உறுதியான நிலைப்பாட்டினைத் தூண்டியதில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட இரு முக்கிய விடயங்கள் இருந்ததையும் வில்சன் சுட்டிக்காட்டியுள்ளார். அவற்றுள் ஒன்று, நிறைவேற்றுத் துறையின் உறுதிப்பாட்டிற்கான தேடல், மற்றையது கருத்தொருமைப்பாட்டு அரசியலை உருவாக்குவதற்கும் பேணுவதற்குமான ஆவல் என்பதாகும். இவ்விரு காரணிகளையும் சுட்டிக்காட்டும் வில்சன், மேற்கத்தேய அமைச்சரவை முறையின் கீழ் குறைந்தபட்ச அரசியல் உறுதிப்பாட்டினையே எதிர்பார்க்க முடியும் என்ற விடயத்தினையும் சூசகமாகக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கப் பெரும்பான்மையானது உறுதியான அரசாங்கத்தினை ஏற்படுத்துவதற்கும் பொருளாதாரத்தினை முன்னேற்றுவதற்கும் போதுமானது மட்டுமல்ல என்பதனை உணர்ந்திருந்த ஜயவர்தனா, ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பின்னரும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலை எவ்வாறு இருந்தது என்ற விடயத்தில் கவனம் கொண்டிருந்ததாகவும் சுட்டிக்காட்டுகின்றார். இதனால் இந்நிலையினை மீளமைப்பதற்கு இவ்யாப்பின் சிற்பிக்கு இரண்டு தெரிவுகள் இருந்ததாகக் குறிப்பிடும் வில்சன், அவற்றுள் ஒன்று ஒரு பலமான ஜனாதிபதித்துவ முறையினைக் கொண்டுவரல். மற்றையது அச்சமயம் காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் பரந்தளவான உடன்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேசிய அரசாங்கத்தினை தாபித்தல் என்பனவாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். எனினும் ஜயவர்தனா இத் தெரிவுகளை முன்மொழிந்த போது இவையிரண்டுக்குமான ஆதரவினைப் பெறமுடியாதிருந்தது.

வில்சன் தனது விளக்கத்தில் 1966 டிசம்பரில் விஞ்ஞான முன்னேற்றக் கழகத்தின் 22ஆவது வருடாந்த மாநாட்டில் ஜயவர்தனா அவர்கள் ஆற்றிய முக்கியத்துவம் மிக்க உரையினை மேற்கோள் காட்டியுள்ளார். இவ்வுரை 1961 இல் Bayeux இல் பிரான்சின் ஐந்தாம் குடியரசு அரசியல் திட்டத்தின் சிற்பியான ஜெனரல் டீ கோல் ஆற்றிய உரையினைப் போன்று முக்கியத்துவம் உடையதாக இருந்தது எனக் குறிப்பிடும் வில்சன், அரசியல் அமைப்பு ஆக்கத்திற்கான சாத்தியப்பாட்டுப் பாதையினை அது சுட்டிநின்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது விடயத்தில் நிலையான நிறைவேற்று அரசாங்கம் தொடர்பில் ஜயவர்தனாவினால் ஆற்றப்பட்ட அவ்வுரையின் பின்வரும் பகுதியினை வில்சன் தனது நூலில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

"எமது நிறைவேற்றுத் துறை அரசாங்கமான கபினட் சட்டமன்றத்தில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றது. சட்டமன்றத்தில் பெரும்பான்மையினைப் பேணுவதிலேயே அதன் ஆயுள் தங்கியிருக்கின்றது. இது விடயத்தில் நாம் பிரித்தானிய அரசியல் திட்டத்தினைப் பின்பற்றியுள்ளோம். சில நாடுகளில் நிறைவேற்றுத் துறை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகின்றது. அதனது இருப்புக் காலத்தில் அது சட்டத்துறையில் தங்கியிருப்பதில்லை. புதிய பிரான்சிய அரசியல் திட்டமானது அமெரிக்க முறையினதும் பிரித்தானிய முறையினதும் இணைப்பாகும். இவ்வாறானதொரு நிறைவேற்றுத் துறையே பலமானதும் வரையறுக்கப்பட்ட காலத்திற்கும் அதிகாரத்தில் அமரக் கூடியதுமாகும். அது தெரிவு செய்யப்பட்ட சட்டத்துறையின் தடைகளுக்குட்பட்டதல்ல. சரியான தீர்மானத்தினை எடுப்பதற்கு அச்சப்படக் கூடியதுமல்ல. நாம்

எதிர்கொள்வது போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ளும் அபிவிருத்தியடைந்து வரும் அரசுகளுக்கு இவ்வாறானதொரு அவசியமான தேவைப்பாடு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது''

நிறைவேற்றுத் துறையின் உறுதிப்பாடு தொடர்பில் மேற்கூறிய உரையினை மேற்கோள்காட்டும் வில்சன், பின்னர் இணக்கப்பாட்டு அரசியல் தொடர்பிலான விடயத்தில் கவனம் செலுத்தியுள்ளார். இதன்கீழ் ஏற்கனவே நடைமுறையிலிருந்த பெரும்பான்மை முறை திறந்தவகையான முரண்பாடுகளை நிலைக்கச் செய்த இரு துருவ கூட்டு முன்னணிகளை உருவாக்கியிருந்ததனையும் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு அன்றி கட்சிகளுக்கு வாக்களிக்கும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையினை ஜயவர்தனா ஆலோசித்ததாகக் குறிப்பிடும் வில்சன், அரசியல் குழுக்கள் ஒரு பொது நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இணக்கப்பாட்டினை அடைவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும் என ஜயவர்தனா கருதியிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கோல் முறையின் தோற்றம் பற்றிய சிந்தனையின் ஆரம்பம் 1966 இல் ஜயவர்தனாவினால் நிகழ்த்தப்பட்ட உரையின் மூலம் வெளிப்பட்டது எனக் குறிப்பிடும் வில்சன், 1971 ஜூலையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையினை வலியுறுத்தி ஜயவர்தனாவினால் முன்மொழியப்பட்ட அரசியலமைப்புத் திருத்தத்தினையும் இது விடயத்தில் விளக்கத்திற்கு எடுத்துக்கொண்டுள்ளார். இத்திருத்தத்திற்கு ஆளும் ஐக்கிய முன்னணியிடம் இருந்தோ தனது கட்சிக்குள் இருந்தோ ஜயவர்தனாவினால் ஆதரவினைத் திரட்டிக் கொள்ள முடியாதிருந்ததனையும் வில்சன் சுட்டிக்காட்டுகின்றார்.

வில்சன் தனது இரண்டாவது அத்தியாயத்தில் இலங்கையில் கோல் முறையின் தோற்றத்திற்குச் சாதகமாக அமைந்த சமூக, பொருளாதார அமைப்பினைப் பற்றிப் பரிசீலிக்கின்றார். இவ்வத்தியாயத்தில் இலங்கையின் இன பல்வகைமைத் தன்மையில் கவனம் செலுத்தும் வில்சன், இலங்கை அரசியலில் இனக்குழுக்களின் வகிபாகம் குறித்தும் ஆராய்ந்துள்ளார். இதன்படி அவர் சிறுபான்மையினரின் அரசியற் பங்களிப்பு மற்றும் அவர்களின் அரசியல் எதிர்காலம் குறித்த சில அபிப்பிராயங்களை வெளிப்படுத்தியுள்ளார். இச்சமூக மற்றும் பொருளாதார முறையின் மூலமான சிக்கல்களை பிரான்சிய புரட்சியுடன் இணைத்துப் பேசவும் வில்சன் முற்பட்டுள்ளதனை அவதானிக்கலாம்.

தனது மூன்றாவது அத்தியாயத்தில் வில்சன் இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டம் உருவாக்கப்பட்டமையினைப் பற்றி ஆராய்ந்துள்ளார். இதில் முதலாம் குடியரசு அரசியல் திட்டத்தின் குறைபாட்டினை அதற்கு எதிராக ஜயவர்தனா வெளியிட்ட கருத்துக்களிலிருந்து அடையாளப்படுத்த வில்சன் முயன்றுள்ளார். இவ்வத்தியாயத்தில் இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தின் உருவாக்கத்தின் போது எழுந்த விமர்சனங்கள், தடைகள் மற்றும் விவாதங்கள் குறித்தும் இந்நூலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஜயவர்தனாவின் தலைமைத்துவம் இவ்வம்சங்களை எவ்விதம் கையாண்டு, புதிய அரசியல் திட்டத்தினைப் படைத்தது என்ற விடயத்தினையும் விபரமாக இந்நூல் வழங்குகின்றது. இவ்வரசியல் திட்டத்தின் விமர்சனங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கும் வில்சன், இவ்வரசியல் திட்டம் தொடர்பாக 'சோசலிச தேசம்' எனும் இடதுசாரி சஞ்சிகையில் வெளிவந்த விமர்சனங்களைப் பட்டியற்படுத்தியுள்ளார். இவ்வாறான விமர்சனங்களுக்கு மத்தியிலும் அது எவ்விதம் தேசிய அசம்பிளியில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது என்பதனை வில்சன் விளக்கத் தவறவில்லை.

நான்காவது அத்தியாயத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறையினைப் பற்றிய விடயத்தில் தனது புலமைசார் கவனத்தினைத் திருப்பியிருக்கும் வில்சன், அது பற்றிய விமர்சன ரீதியான பகுப்பாய்வு ஒன்றினை இவ்வத்தியாயத்தில் மேற்கொண்டுள்ளார். இவ்வத்தியாயத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடர்பான பிரான்சின் அனுபவம் மற்றும் அது இலங்கையில் உருவாக்கப்பட்டதற்கான பின்னணி ஆகிய விடயங்களில் கவனம் செலுத்தியிருக்கும் வில்சன், நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள், அவரது பதவிக் காலம், ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் உள்ள தொடர்பு, ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்குமுள்ள தொடர்பு, ஜனாதிபதிக்கும் பொதுச் சேவைக்கும் உள்ள தொடர்பு குறித்தும் கவனம் செலுத்தியுள்ளார். இத்தகையதொரு நிறைவேற்று ஜனாதிபதி முறையினை கொண்டுவருவதற்கு ஜயவர்தனா கொண்டிருந்த அவாவினையும், அதற்காக அவர் மேற்கொண்ட முயற்சியினையும் பிரான்சின் ஐந்தாம் குடியரசின் ஸ்தாபகர் டீ. கோலின் செயற்பாடுகள், அவர் வெளியிட்ட கருத்துக்களுடன் இணைத்துப் பேசியுள்ளார். இதன்படி பிரான்சின் ஐந்தாம் குடியரசின் ஜனாதிபதி மற்றும் இலங்கையின் இரண்டாம் குடியரசின் ஜனாதிபதி ஆகியோரை ஒப்புநோக்கிய ஒரு ஆய்வினையே இங்கு வில்சன் மேற்கொண்டுள்ளார்.

வில்சன் ஆறாவது அத்தியாயத்தில் கோல் முறையுடன் தொடர்புபட்ட இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தின் முக்கிய அம்சங்களான பிரதம மந்திரி, அமைச்சர்கள், பாராளுமன்றம் மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஆகிய விடயங்களைப் பற்றிய அடிப்படையான தகவல்களை விமர்சன ரீதியான நோக்கில் வழங்கியுள்ளார். இது தொடர்பில் இவரது கவனம் பிரதம மந்திரி, அமைச்சர்கள், பாராளுமன்றம் என்பன ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்தும் கருவிகளாக உள்ளன என்ற

விடயத்தில் குவிக்கப்பட்டுள்ளது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது அதற்கு உதவியளிப்பதாக உள்ளது என்ற விடயத்தினையும் வில்சன் குறிப்பிட்டுள்ளார். இவ்விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் விளைவாகத் தோற்றம் பெறும் எனக் கருதப்பட்ட பல கட்சி முறை பற்றிய விடயத்தினையும் வில்சன் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பிலும் பிரான்சிய அனுபவங்களுடன் இணைத்துப் பேசுவதை வில்சன் தவிர்த்துவிடவில்லை.

ஆறாவது அத்தியாயத்தில் அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் மொழி தொடர்பான பிரச்சினையில் தனது கவனத்தினைச் செலுத்தும் வில்சன், அது பற்றிய விடயங்களை சிறுபான்மையினர் உரிமைகளுடன் தொடர்புபடுத்திப் பகுப்பாய்வு செய்துள்ளார். இவ்விடயத்தினுள் சோல்பரி யாப்பின் 29ஆம் சரத்து, முதலாம் குடியரசு அரசியல் திட்டத்தில் வழங்கப்பட்டிருந்த அடிப்படை உரிமைகள், அரச கொள்கை வழிகாட்டிக் கோட்பாட்டு நெறிகள் ஆகியவற்றுடனும் தொடர்புபடுத்தி இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தின் அடிப்படை உரிமைகள் சுதந்திரங்கள் பற்றிய விடயத்தினை வாசகர்களுக்கு வழங்கியுள்ளார். இது விடயத்தில் மொழிப் பிரச்சினையில் கூடிய கவனம் செலுத்தியிருக்கும் வில்சன், பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் முதன்மை ஸ்தானம் என்ற விடயத்தின் அபாயகரத் தன்மையினையும் எச்சரித்துள்ளார். இதன் மூலம் பரந்தளவிலான உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை உள்ளடக்கிய அரசியலமைப்பு ஏற்பாட்டின் அவசியத்தினையும் வில்சன் வலியுறுத்தியுள்ளார்.

ஏழாவது அத்தியாயத்தில் வில்சன் நீதித்துறை மற்றும் பொதுச் சேவை ஆகிய விடயங்களை பரிசீலனைக்கு உட்படுத்தியுள்ளார். நீதிச் சேவை சுதந்திரத்தினை ஏற்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்திய விடயங்களில் வில்சன் தனது கவனத்தினைச் செலுத்தியிருப்பதுடன் நீதித்துறைச் சுதந்திரத்தினைப் பாதிக்கத் தக்கவகையில் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பிலும் தனது விமர்சனப் பார்வையினைச் செலுத்தியுள்ளார். நீதித்துறையின் சுதந்திரம் பற்றிய ஏற்பாட்டில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் பங்கு குறித்தும் வில்சன் கவனம் செலுத்தியுள்ளார். பொதுச் சேவை தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கும் வில்சன், முதலாம் குடியரசு அரசியல் திட்டத்தில் பொதுச் சேவை பாதிக்கப்பட்டிருந்த நிலையினையும் சுட்டிக்காட்டியுள்ளார். புதிய அரசியல் திட்டத்தில் பொதுச் சேவை ஆணைக்குழு உருவாக்கப்பட்டிருந்தாலும் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களினூடாக அதற்கிருந்த கட்டுப்பாடுகளையும் வில்சன் கண்டிக்கின்றார்.

வில்சனின் நூலில் எட்டாவது அத்தியாயமாக அமைக்கப்பட்டிருக்கும் முடிவுரையில் அவர் தனது நூலில் பகுப்பாய்வுக்குட்படுத்தியிருக்கும் விடயங்களைத் தொகுத்து தருவதுடன் புதிய அரசியல் திட்டத்தினை உருவாக்கியர்வர்கள் கொண்டிருந்த நோக்கங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றார். இதன்படி இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தினை வரைந்தவர்கள் நான்கு அடிப்படை நோக்கங்களைக் கொண்டிருந்தனர். முதலாவது நோக்கம், ஜனநாயக மற்றும் அரசியல் திட்ட ரீதியான அரசாங்கம் குறிப்பிட்ட காலத்திற்கு நிலைத் திருப்பதனை உறுதிப்படுத்தத்தக்கவகையிலான அரசியல் திட்டத்தினை உருவாக்குவதாகும். இரண்டாவது நோக்கம், இருதுருவ அமைப்புகளுக்கிடையிலான திறந்த முரண்பாடுகளை விட கூட்டு முன்னணி அரசியல் ஊடாக கருத்தொருமைப்பாட்டினைக் கட்டியெழுப்புதலும் அதனை உறுதிப்படுத்துவதற்கு விகிதாரசாரப் பிரதிநிதித்துவ முறையினை ஏற்றுக்கொள்ளலுமாகும். இதன் மூலம் பெரும்பான்மையினரின் கொடுங்கோல் ஆட்சி குறைக்கப்பட முடியும்.

மூன்றாவது நோக்கம், குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட பரப்புக்களில் பிரதான சிறுபான்மையினரின் மொழியினை உத்தியோக ரீதியானதாக்குதல், உத்தியோகபூர்வ சிங்கள மொழிப் பதிப்புக்களை தமிழுக்கு மொழிபெயர்ப்புச் செய்வதற்கான விரிவான ஏற்பாடுகளை செய்தல், உச்ச நீதிமன்றம் மற்றும் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் ஆகியோரினூடாக இந்த விதிகளை நடைமுறைப்படுத்த முடியும் என்பதனை அங்கீகரித்தல் போன்ற ஏற்பாடுகளினூடாக தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சியினை மேற்கொள்வதாக இருந்தது.

நான்காவது நோக்கம், மேற்குலகத்தினதும் வெளிநாட்டு முதலீட்டாளர்களினதும் அபிப்பிராயத்திற்கு இசைவாக இருத்தலாகும். மேற்கூறிய நோக்கங்களை அடையாளப்படுத்தியிருக்கும் வில்சன் இந்நோக்கங்கள் அடையப்பட்டுள்ள விதம் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளார். இந்நோக்கங்களை அடைவதில் முழுமையான வெற்றியினை இலங்கையின் இரண்டாம் குடியரசு பெறவில்லை எனவும் அது பிரான்சின் டீ கோல்வாத அடிப்படைகளைக் கொண்டு தனக்கேயுரிய சூழ்நிலையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் வில்சன் உறுதிபடக் கூறியுள்ளார். நூலின் பிற்பகுதியில் தனது ஒன்பதாவது அத்தியாயமாக வில்சன் ஜனாதிபதித்துவவாதம் தொடர்பிலான மீள் மதிப்பீடு ஒன்றினையும் மேற்கொண்டுள்ளார்.

இந்தவகையில் வில்சன் தனது ஒன்பது அத்தியாயங்களிலும் இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தின் உள்ளடக்கங்கள் குறித்தே கூடியளவு கவனம் செலுத்தியுள்ளார். இவ்வரசியல் திட்டம் குறித்து அவர் தனது நூலில் வழங்கியிருக்கும் கருத்துக்களை நோக்குகின்ற போது, அரசியல் கட்டமைப்புக்களுடன் அவற்றினைத் தொடர்புபடுத்தி நோக்கியிருப்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

அரசியல் கட்டமைப்புக்கள் என்பது குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கானதும் குறிப்பிட்ட இலக்கினை அடிப்படையாகக் கொண்டதுமாகும். இதனது விளக்கத்தினை 1948 - 1972 வரையான காலத்தில் இலங்கையில் நடைமுறையிலிருந்த அரசியல் திட்டம், அதன் பின்னர் வந்த முதலாம் குடியரசு மற்றும் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டங்களின் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது என வில்சன் கூறுகின்றார். குறுகிய கால இருப்பினைக் கொண்ட முதலாம் குடியரசு அரசியல் திட்டம் ஒரு வகையான சோசலிசத்திற்கான தேடுதல் பற்றிய சான்றாதாரத்தினை வழங்கியது எனவும், இவ்வரசியல் திட்டமானது சமூக ஜனநாயகவாதிகள், சிங்கள் பௌத்தர்கள், இனரீதியான ஆயுததாரிகள் மற்றும் மாக்சீஸ்டுகள் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட பலவீனமான உடன்பாடுகளின் விளைவிலானதாகவும் இருந்தது என்கிறார். இது தகுதியற்ற, ஊழல் நிறைந்த, சதியாலோசனை என்ற அதனது சொந்த சதுப்புநிலத்தில் மூழ்கியிருந்தது எனவும் கூறுகின்றார். ஆனால் 1978 ஆம் ஆண்டைய அரசியல் திட்டமானது மிகவும் நிச்சயமானதாகவும் என்ன விடயம் செய்யப்பட வேண்டும் என்பதற்கான திடமான நம்பிக்கை பற்றிய சான்றாதாரத்தினையும் வழங்குவதாகக் குறிப்பிடுகின்றார். இது இரட்டைத் தன்மை (Hybrid) வாய்ந்த அரசாங்க முறையினைப் படைத்துள்ளது. அதாவது, ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதித்துவ முறையின் சில அம்சங்களைக் கொண்டு பிரான்ஸ் மற்றும் பிரித்தானிய அரசாங்க முறை மாதிரிகளினை பின்பற்றியதான அரசாங்க முறையினை அறிமுகம் செய்துள்ளது. அபிவிருத்தியினை நோக்கியதான அரசாங்கத்தினை ஏற்படுத்துவதற்கான வழியில் இது முக்கியமான ஒரு முயற்சியாகும்.

இவ்வரசியல் திட்டத்தின் பிரதான நோக்கம் பொருளாதாரத்தினை முன்னேற்றுவதும் தேசிய ஐக்கியத்தினைப் பாதுகாப்பதுமாக இருந்ததுடன், அதனை மேலும் வலுப்படுத்துகின்றது. இது ஈரான், தென் கொரியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளின் அடக்குமுறை மாதிரியிலான அபிவிருத்தி, மத்தியமயப்படுத்தப்பட்ட அரசியல்மயப்படுத்தல் அற்ற அரசியல் கட்டமைப்புக்களை ஒத்து நிற்காமல் அல்லது அவற்றினைத் தவிர்ப்பதற்கான ஒரு முயற்சியாக இருந்தது. இவ்வாறாக இலங்கைக்கே உரித்தான ஜனநாயக அரசாங்கத்திற்கான ஒரு முக்கிய அடிப்படையாக இவ்வரசியல் திட்டம் அமையப் பெற்றது. எனினும் இவ்வரசியல் திட்டத்தின் பின்னணியில் அரசியல் அதிகாரத்துவவாதத்திற்கான எதிர்பார்ப்பைக் குறைக்கும் நோக்குடன் பணியகத்தினரின் நிறைவேற்றுகையை மாற்றியமைத்தல் என்ற விடயங்களும் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். இரண்டாம் குடியரசு அரசியல் திட்டமானது இராஜ பிரதிநிதிக்குரிய தன்மையினைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிடும் வில்சன், அமைச்சரவையின் உறுப்பினர்கள் நிறைவேற்று ஜனாதிபதியின் சகாக்களாக அல்லாமல் அவரது ஆணைக்கு அடிபணியும் லெப்டினன்ட்களாக உள்ளனர் எனக் குறிப்பிடுகின்றார்.

மேற்படி வில்சனின் நூலினை முழுமையாக நோக்குகின்ற போது பின்வரும் முடிவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. இதன்படி சட்ட சிந்தனையின் ஒரு உற்பத்தியாக இருக்கும் இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தினை அரசியல் விஞ்ஞான நோக்கில் நின்று வில்சன் பரிசோதிக்க முற்பட்டுள்ளார். இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க முறைமையின் அபாயங்களையும் சிக்கல்களையும் அடையாளப்படுத்த வில்சன் முயற்சித்துள்ளார். அதாவது அரசியல் திட்ட உருவாக்கத்தின் போது அரசாங்கத்தின் அரசியல் திட்ட வழக்கறிஞர்களின் கவனத்திற்குட்படாத விடயங்களில் வில்சன் கவனம் செலுத்தியுள்ளார். மேற்படி தடைகளை வெற்றி கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கவும் வில்சன் தனது நூலில் முயற்சித்துள்ளார். அவரது காலத்து உளப்பாங்கினைத் தீர்மானிக்கும் வகையிலும் எதிர்காலச் சாத்தியப்பாடுகளை ஊகிக்கும் வகையிலுமான நோக்கில் நின்று கொண்டு, இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தினை அதனது அரசியல் சூழ்நிலையில் நின்று ஆராய்ந்துள்ளார். இந்நூலில் அரசியல் திட்டத்தின் செயற்பாட்டினை வடிவமைத்த, ஆனால் வெளிக்கொண்டுவரப்படாத காரணங்களை வெளிக்கொண்டுவர அவர் முயற்சித்துள்ளார். புதிய நிர்வாகத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் ஆராய்ந்து கண்டறிவதற்கான முயற்சியினையும் வில்சன் இந்நூலின் மூலமாக மேற்கொண்டுள்ளார். கோல்வாத ஐந்தாம் குடியரசு அரசியல் திட்டத்தின் மாதிரியினை இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தில் உள்ள பல்வேறு விடயங்களுடன் ஒப்பிடுவதற்கான முயற்சியினை அவர் மேற்கொண்டுள்ளார். இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தில் உள்ள விடயங்கள் தொடர்பில் விமர்சன ரீதியானதொரு விளக்கத்தினையும் வில்சன் வழங்க முற்பட்டுள்ளார்.

### 2.4 பங்களிப்புக்கள்

இந்நூலின் பங்களிப்பினைப் பற்றி ஒரு வார்த்தையில் கூறுவதாக இருந்தால் இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தினைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்வதற்கான ஒரு புறவமைப்பினை இந்நூல் கொண்டுள்ளது எனலாம். இந்தவகையில் இலங்கையின் அரசியல் இயங்குநிலையினைப் புரிந்துகொள்வதற்கு இந்நூல் வழங்கும் பங்களிப்பினைப் பின்வருமாறு விரிவாக மதிப்பீடு செய்யலாம். இலங்கையின் அரசியல் இயங்குநிலையினைப் பற்றிய புரிதலில் இந்நூல் வழங்கும் பிரதான பங்களிப்புக்களுள் ஒன்று கோல்வாத முறைமையின் தோற்றத்தினை விளங்கிக் கொள்ள உதவுவதாகும். பிரான்சின் ஐந்தாம் குடியரசு யாப்பின் ஸ்தாபகரான ஜெனரல் டீ கோலின் அரசியல்

சிந்தனையிலிருந்து உருவானதே கோல்வாத முறையாகும். இம்முறையின் தோற்றத்திற்கான பின்னணி, மற்றும் அவரது சிந்தனையின் அடிப்படையாக இருந்த சில அம்சங்களையும் வில்சன் தனது நூலில் விபரித்துள்ளார். இதன் மூலம் கோல்வாத முறை பற்றிய ஆரம்ப விளக்கத்தினை இதனைப் படிக்கும் ஒரு வாசகர் பெற்றுக்கொள்ள முடியும்.

வெறுமனே கோல் முறையினை பற்றிய அறிவினை மட்டும் வழங்காது வாசகர்களுக்கு அம்முறையின் தன்மைகள் மற்றைய நாடுகளில் தாக்கம் செலுத்தியுள்ள விதத்தினையும் வில்சன் குறிப்பிட்டுள்ளார். இம்முறையின் ஆசியத் தோற்றம் பற்றிய வில்சனில் தேடலில் இலங்கையின் 1978ஆம் ஆண்டைய இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தினை அவர் கண்டறிந்துள்ளார். இதன்படி கோல் முறையின் தோற்றத்தோடு இணைந்ததாக வில்சன் இலங்கையிலும் அம்முறை தோற்றம் பெற்ற விதத்தினை ஆராய்ந்துள்ளார். இதன்மூலம் இவ்விரு அரசாங்க மாதிரிகளினதும் ஒத்ததன்மைகளை மற்றையவர்கள் புரிந்துகொள்ளத்தக்கதாக வில்சனின் விளக்கங்கள் அமையப்பெற்றிருக்கின்றன. எனினும் வில்சன் கோல்வாத முறையினை அது பற்றிய அறிமுகமில்லாதவர் தெளிவாக புரிந்துகொள்ளத்தக்கவகையில் தனது விளக்கத்தினை வழங்கியிருக்கவில்லை. இலங்கையின் அரசியல் மாதிரியினை விளங்கிக் கொள்வதற்கான எடுத்துக்காட்டுக்களாகவே அவர் அதனைக் கையாண்டுள்ளார். இலங்கையின் அப்போதைய அரசாங்க முறையில் உள்ள விடயங்களை கோல்வாத அடிப்படையிலானவையாக நிரூபிப்பதற்காகவே இம்முறையினை ஒப்பீட்டு அடிப்படையில் வில்சன் எடுத்தாண்டுள்ளார்.

இந்நூலினைப் படிக்கும் ஒருவர் சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றினை ஓரளவுக்குப் புரிந்துகொள்ள முடியும். சுதந்திர இலங்கையின் அரசியல் பற்றி முழுமையான வரலாற்று ரீதியான தகவல்களை இந்நூல் வழங்கவில்லையாயினும் இலங்கையில் கோல்வாத முறையின் தோற்றத்திற்கான பின்னணியினை விபரிக்கும் போது, சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் குறித்து வில்சன் கவனம் செலுத்தியிருப்பதிலிருந்து இதனைப் பெற்றுக் கொள்ள முடியும். அதிலும் குறிப்பாக சுதந்திர இலங்கையின் அரசாங்க மாதிரிகள், அவற்றின் பின்னணிகள் என்பவற்றில் கவனம் செலுத்தியே வில்சன் தனது விளக்கங்களை வாசகர்களுக்கு வழங்கியுள்ளார். சுதந்திர இலங்கையின் அரசியல் பற்றிய விவாதத்தில் முக்கிய கவனம் செலுத்தப்படும் பொருளாதார ரீதியான அபிவிருத்தி நிலை பற்றியும் வில்சன் கவனம் செலுத்தியுள்ளமை இலங்கையின் அரசியற் பொருளாதாரம் பற்றிய தேடலில் ஈடுபடும் ஒருவருக்கு பயனளிக்கக் கூடியதாகும்.

இலங்கையின் கோல்வாத முறையின் தோற்றத்தின் பின்னணியில் பொருளாதார முறையினைப் பற்றியும் கருத்திற்கொள்ளும் வில்சன் கோல்வாத அரசாங்க முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்படுவதற்கான நோக்கங்களுள் ஒன்றாகவும் பொருளாதார ரீதியான நீண்டதூர அபிவிருத்தி இருந்ததாகவும் சுட்டிக் காட்டுகின்றார். இதன்மூலம் கோல்வாத அரசியல் முறையின் பின்புலத்தில் உள்ள அரசியல், பொருளாதாரம் பற்றிய விடயங்களைப் புரிந்துகொள்வதற்கும் வில்சனின் இந்நூல் பங்காற்றுகின்றது. எனினும் இலங்கையின் அரசியற் பொருளாதாரத்தினை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கு அது போதுமான ஒரு நூல் எனக் கூறிவிட முடியாது. இந்நூலின் நோக்கமும் அதுவல்ல. உண்மையில் இதனைப் படிக்கும் ஒருவர் இலங்கையின் அரசியற் பொருளாதாரம் பற்றிய ஒரு சிறு அறிமுகத்தினையேனும் பெற்றுக்கொள்ள முடியும். அவ்விதமானதொரு பங்களிப்பினை வழங்கக்கூடிய விதத்திலேயே இலங்கையின் அரசியற் பொருளாதாரம் பற்றிய இயங்குநிலையினை ஆங்காங்கே வில்சன் விபரித்துள்ளார்.

இந்நூலினை ஆராயும் ஒருவர் இலங்கையின் சமூகக் கட்டமைப்பு முறைமை அரசியலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றிப் புரிந்துகொள்ள முடியும். வில்சன் தனது நூலில் இலங்கையின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புக்கென தனியான ஒரு அத்தியாயத்தினை ஒதுக்கியுள்ளதுடன், இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார முறைமையின் விருத்தியில் இலங்கைச் சமூக முறையின் தாக்கத்தினை மதிப்பிட்டுள்ளார். இவரது இம்மதிப்பீடு இலங்கையின் அரசியலில் சமூக முறைமையின் தாக்கத்தினை விளங்கிக் கொள்ள உதவுவதுடன் சமூக முறைமைக்கு ஏற்ப எவ்வாறு அரசாங்க முறையினை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான வழிகாட்டலினையும் வழங்குகின்றது. வெறுமனே இலங்கையின் சமூக முறைமையின் தரவுகளை புள்ளிவிபர ரீதியாகத் தொகுத்து வழங்கும் பாணியினை வில்சன் பின்பற்றாது இலங்கையின் சமூக முறைமையில் உள்ள பல்வேறுபட்ட குழுக்களையும் அடையாளம் கண்டு அவர்களது அரசியல் அபிலாசைகளிலும் கவனம் செலுத்தியுள்ளார். இவர்களது அரசியல் உரிமை வகிபங்கினை பற்றியும் வில்சன் விமர்சன நோக்கில் விளக்கியுள்ளார்.

இலங்கையர் சமூகத்தின் பல்லினத் தன்மையினைப் பற்றி விபரிக்கும் வில்சன், அவ்வாறான பல்லினத் தன்மையான சமூகத்தில் அரசியல் முறைமை எவ்வாறான தன்மையினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற விடயத்தினையும் விபரித்துள்ளார். சமூக வகுப்பினர்களின் அரசியல் அந்தஸ்து பற்றிய விடயம் அரசியல் முறைமையில் பிரதிபலிக்காத போது, அவர்கள் கிளர்ந்தெழுவது தவிர்க்க முடியாத ஒன்று என வில்சன் கருதுகின்றார். இவ்வாறு அவர் கருதியிருப்பதானது இலங்கையின் அரசியல் திட்டம் குறித்த ஒரு சமூக ரீதியான நோக்கினையும் அவரது நூல் கொண்டிருப்பதனை எடுத்துக் காட்டுகிறது. இவ்விளக்கத்தில் நின்று ஒருவர் அரசியல் முறைமையில் சமூகக் குழுக்களின் பங்கு எவ்வாறு இருக்க

வேண்டும்?, சமூக முறைமைக்கு ஏற்ப அரசியல் முறைமைகள் எவ்வாறு வடிவமைக்கப்பட வேண்டும்? என்ற விடயங்களைப் புரிந்துகொள்ள முடியும். இதனை விளக்குவதில் வில்சன் பிரான்சின் உதாரணங்களை பயன்படுத்தியுள்ளார்.

இலங்கையின் அரசியல் இயங்குநிலையினை புரிந்துகொள்வதற்கு இந்நூல் வழங்கும் மற்றுமொரு பங்களிப்பு இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டம் உருவானமைக்கான பின்னணியினை அறிந்துகொள்வதற்கு இந்நூல் உதவுவதாக உள்ளது. இது விடயத்தில் புதிய அரசியல் திட்டத்தினை உருவாக்குவதில் உள்ள தடைகள் மற்றும் அத்தடைகள் எவ்வாறு வெற்றிகொள்ளப்பட்டன என்பது பற்றி வில்சன் விளக்கியிருப்பதிலிருந்து, அதனைக் கற்றுக் கொள்ளும் அரசியல் திட்ட அறிஞர்களும் அரசியல் வாதிகளும் வெற்றிகரமான அரசியல் யாப்பினை உருவாக்கும் திறனைப் பெற்றுக்கொள்ள முடியும். வில்சன் இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்புத் திட்ட உருவாக்கத்திற்கான பின்னணியில் ஜே.ஆர். ஜயவர்தனாவின் அரசியல் தலைமைத்துவத் திறன் பற்றியும் கவனம் செலுத்தியுள்ளார். இவ்விடயம் வேறுபட்ட விவாதங்களுக்கு மத்தியில் உறுதியாக நின்று தமது அரசியல் கொள்கைகளை வகுக்க வேண்டும் என்ற திடமான நம்பிக்கையினை அரசியல் தலைமைகளுக்கு ஏற்படுத்தக் கூடியதாகும்.

இலங்கையின் ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் திட்டம் உருவாக்கப்பட்ட பின்புலத்தில் காணப்பட்ட விவாதங்களையும், அதற்கு அப்போதைய அரசியல் தலைமையும் யாப்பின் சிற்பியுமான ஜே.ஆரின் பதில்களையும் அறிந்து கொள்வதற்கு இந்நூல் உதவுவதாக உள்ளது. இது தொடர்பில் ஜயவர்தனா பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டி ஆற்றிய உரைகளையும் வில்சன் தனது நூலில் மேற்கோள் காட்டியுள்ளதுடன், அவ்வுரையின் உள்ளார்ந்த அம்சங்கள் குறித்து தனது புலமைசார் அறிவினைக் கொண்டு விமர்சன நோக்கில் ஆராய்ந்துள்ளார். இது இலங்கையின் அரசியல் திட்டம் பற்றிய தெளிவான புரிதலைத் தேடும் ஒருவருக்கு பெரிதும் பயன்படக் கூடியதாகும். புதிய அரசியல் திட்டத்தின் பின்னணியினை பற்றிய விடயங்களை மட்டுமன்றி, ஏற்கனவே இலங்கையில் காணப்பட்ட அரசியல் திட்டங்களின் பிரதான குறைபாடுகளைப் புரிந்துகொள்வதற்கும் இந்நூல் பெரிதும் பங்காற்றுகின்றது. குறிப்பாக இலங்கையின் கோல்வாத சிந்தனையாளர் ஜே.ஆரின் கருத்துக்களை மேற்கோள்காட்டி வில்சன் அக்கருத்துக்களை தனது நூலில் பகிர்ந்துகொண்டுள்ளார்.

இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தின் மீது முன்வைக்கப்படும் விமர்சனங்கள் அல்லது கண்டனங்கள் பற்றிய விடயங்களை அறிந்து கொள்வதற்கும் இந்நூல் உதவுகின்றது. இது தொடர்பில் யாப்பு உருவாக்கக் காலத்தில் காணப்பட்ட பல்வேறு கண்டனங்களை வில்சன் மேற்கோள் காட்டியிருப் பதானது அது பற்றிய விபரங்களைத் தேடுபவர்களுக்கு பெரிதும் துணைபுரிகின்றது. இது விடயத்தில் குறிப்பாக வில்சன் இடதுசாரிகளால் முன்வைக்கப்பட்ட எதிர் விமர்சனங்கள் குறித்த ஒரு பட்டியலைத் தந்துள்ளதுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் விமர்சனங்கள், அதற்காக அவர்கள் மேற்கொண்ட பல முயற்சிகள் பற்றியும் வாசகர்களுக்குப் போதுமான விளக்கத்தினைத் தந்துள்ளார். இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியல் திட்டமானது கருத்தொருமைப்பாடற்ற ஒரு நிலையில் உருவாக்கப்பட்ட விடயத்தினைப் பற்றி வில்சன் விபரித்துள்ளதன் மூலம் இலங்கையின் அரசியல் திட்டம் எவ்வாறான சந்தர்ப்பத்தில், எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதனை அறியச் செய்துள்ளார்.

இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறை பற்றி விளங்கிக் கொள்ள முற்படும் ஒருவருக்கு வில்சனின் இந்நூல் பெரும் பொக்கிசமாகும். இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறை பற்றிய விளக்கத்தில் அது பற்றிய தனி அத்தியாயத்தினை தனது நூலில் உள்ளடக்கியுள்ளமையானது அது பற்றிய விளக்கத்தினை விபரமாக வழங்குவதாக உள்ளது. இது தொடர்பில் தனக்கிருந்த புலமைசார் அறிவுடன் இணைத்து வில்சன் விளக்கியிருக்கும் விதம், இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறை பற்றிய புலமைசார் அறிவியல் வெற்றிடத்தினைப் பூர்த்தி செய்கின்றது. வில்சனின் நிறைவேற்று ஜனாதிபதி முறை பற்றிய அத்தியாயத்தினை படிக்கும் ஒருவர், இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையின் தோற்றம், நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகார நிலை, ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்குமிடையிலான தொடர்பு, ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் இடையிலான தொடர்பு, ஜனாதிபதி பொதுச் சேவையுடன் தொடர்புபடும் விதம் என்பவற்றினைப் புரிந்துகொள்ள முடியும்.

ஜனாதிபதி கொண்டிருக்கும் அதிகரித்த அதிகாரங்கள், அவருக்குள்ள சட்ட விடுபாட்டுரிமைகள் மற்றும் சலுகைகள் என்பவற்றினைப் பற்றிய ஒரு விமர்சன விளக்கத்தினையும் இந்நூலினைக் கற்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். பிரான்சின் ஐந்தாம் குடியரசில் உள்ள ஜனாதிபதி முறையுடன் ஒப்பு நோக்கிய விளக்கத்தினை வில்சன் இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தின் ஜனாதிபதி தொடர்பிலும் மேற்கொண்டுள்ளதால் கோல்வாத ஜனாதிபதி முறைமையின் அடிப்படைகளையும் இலங்கை ஜனாதிபதி முறைமையின் அடிப்படைகளையும் ஒருவரால் புரிந்துகொள்ள முடியும். இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையில் உள்ள பாதகங்களை விளங்கிக் கொள்வதற்கும் வில்சனின் இம்முயற்சி பெரிதும் துணைபுரிகின்றது. வில்சன் தனது நூலில் ஜனாதிபதித்துவ முறை தொடர்பாக மேற்கொண்டிருக்கும் விமர்சனங்கள் இதனை எமக்கு நன்கு புலப்படுத்துகின்றன.

இலங்கையின் அரசாங்கக் கட்டமைப்பில் உள்ள பிரதம மந்திரி, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகள் பற்றி அறிந்துகொள்வதற்கும் இந்நூல் பெரிதும் துணை புரிகின்றது. இங்கு பிரதம மந்திரி நியமிக்கப்படும் முறை, அவரது அதிகார நிலை என்பவற்றினைப் பற்றிய விமர்சன ரீதியான பார்வையினைப் புரிந்துகொள்ள முடிவதுடன் பிரான்சின் கோல்வாத அரசாங்க முறையின் பிரதம மந்திரியின் செயற்பாடுகள் பற்றியும் ஒப்பீட்டு நோக்கில் அறிந்துகொள்வதற்கு வில்சன் தனது நூலின் மூலமாக உதவியுள்ளார். இலங்கையின் இரண்டாம் குடியரசின் பிரதமர், பாராளுமன்ற அரசாங்க முறையில் காணப்படும் பிரதம மந்திரியில் இருந்து வேறுபடும் விதத்தினைப் புரிந்துகொள்வதற்கும் இவரது இவ்வாய்வு உதவுதாக உள்ளது. வில்சன் தனது நூலில் இலங்கையின் தற்போதைய அமைச்சரவை முறையின் அரசியல் திட்ட நிலை, அவர்களது நியமனம் மற்றும் அதிகாரம் போன்ற பல விடயங்களையும் விமர்சன நோக்கில் தந்துள்ளமையானது இலங்கையின் அமைச்சரவை பற்றிய ஆய்வுத் தேடலில் ஈடுபடும் ஒருவருக்கு உதவக் கூடியதாக உள்ளது.

அமைச்சரவை தொடர்பான தனது விளக்கத்தில் இலங்கையின் அமைச்சரவை தொடர்பான வரலாற்றுக் கண்ணோட்டத்தினையும் வில்சன் மேற்கொண்டிருப்பதனால் இலங்கையின் அமைச்சரவை முறையின் தோற்றம், வளர்ச்சி பற்றிப் புரிந்துகொள்வதற்கும் வில்சனின் நூல் சில ஆரம்பக் குறிப்புக்களை வழங்குகின்றது எனலாம். இலங்கையின் பாராளுமன்றம், அதன் கட்டமைப்பு, அதன் அதிகாரம் மற்றும் அதனுடன் ஜனாதிபதி தொடர்புபடும் விதம் என்பவற்றினைப் பற்றிய விடயங்களை அறிந்துகொள்வதற்கும் இந்நூல் பங்களிப்புச் செய்கின்றது. வில்சனின் இந்நூலினைப் படிக்கும் ஒருவர், வெறுமனே இலங்கையின் இரண்டாம் குடியரசின் பாராளுமன்றத்தினை மட்டுமன்றி, ஏற்கனவே முதலாம் குடியரசில் காணப்பட்ட தேசிய அசம்பிளியினைப் பற்றியும் புரிந்துகொள்ள முடிகின்றது. இது விடயத்தில் பிரான்சிய பாரளுமன்ற மாதிரியினைப் பற்றிய சிறு அறிமுகத்தினையேனும் வாசகர்களால் பெற்றுக் கொள்ள முடியுமானதாக இருக்கின்றது. பாராளுமன்றங்கள் தொடர்பில் வில்சன் மேற்கொண்டிருக்கும் இவ்விதமான ஒப்பு நோக்கிய பார்வையானது, அது பற்றிய தெளிவான புரிதலுக்கு இட்டுச் செல்கின்றது. பாராளுமன்றம் தொடர்பான விளக்கத்தில் பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்குள்ள வரம்புகள், பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கு தடயங்களாக உள்ள விடயங்களைப் புரிந்துகொள்வதற்கும் வில்சனின் இந்நூல் பெரிதும் பங்காற்றுகின்றது.

இலங்கையில் அண்மைக்காலமாக விமர்சனங்களுக்கு உள்ளாகிவரும் விகிதாசாரத் தேர்தல் முறை பற்றிய அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கும் வில்சனின் இந்நூல் பெரிதும் துணைபுரிகின்றது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை பற்றி வில்சன் விரிவான விளக்கம் ஒன்றினை வழங்கியுள்ளார். இம்முறைமையினை பற்றிய விமர்சன ரீதியான விளக்கத்தினை வில்சன் முன்வைப்பதானது அம்முறையின் சாதக பாதகங்களைப் பற்றி வாசகர்கள் அறிந்துகொள்வதற்குத் துணைபுரிகின்றது. இது பற்றிய விளக்கத்தின் மூலம் இலங்கையின் பல்கட்சி முறையின் தோற்றம் பற்றிய சிறு அறிமுக விளக்கத்தினையும் வாசகர்கள் புரிந்துகொள்ள முடியும். பிரதிநிதித்துவம் தொடர்பாக வில்சன் தனது விளக்கத்தினை வழங்கும் போது ஒப்பீட்டு முறையினைக் கையாண்டிருக்கின்றார். இதன்படி அவர் பிரான்சிய மற்றும் ஜேர்மனிய முறைகளில் கவனம் செலுத்தும் விதம் அம்முறை பற்றிய தெளிவான விளக்கத்தினை வழங்குவதாக உள்ளது.

இலங்கையில் பிரஜைகளுக்கு இருக்கும் அடிப்படை உரிமைகள் பற்றிப் புரிந்துகொள்வதற்கும் இவரது நூல் உதவுகின்றது. அடிப்படை உரிமைகளை மட்டுமன்றி பிரஜைகளின் மொழி உரிமைகள், மொழி உரிமைகள் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் பற்றி அறிந்துகொள்வதற்கும் இந்நூல் உதவுகின்றது. சிறுபான்மையினர் மொழி உரிமைகளை அனுபவிப்பதில் காணப்படும் தடைகள், இது தொடர்பில் ஏற்கனவே இருந்த அரசியல் திட்டங்களில் காணப்பட்ட விதிகள் பற்றியும் வில்சன் ஆராய்ந்துள்ளார். இவ்வுரிமைகள் சுதந்திரங்கள் தொடர்பில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை அறிந்துகொள்வதற்கும் இவரது நூல் பங்காற்றுகின்றது. அடிப்படை சுதந்திரங்கள் தொடர்பான வில்சனின் விளக்கத்தினை படிக்கும் ஒருவர் அதில் இலங்கையின் அரச கொள்கை வழிகாட்டிக் கோட்பாடுகள், இலங்கையில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் முதன்மை நிலை என்பவற்றினையும் அவற்றின் பாதிப்புக்களையும் புரிந்துகொள்ள முடியும். இலங்கையின் தற்போதைய நீதித்துறை மற்றும் பொதுச் சேவை பற்றிய விடயங்களைப் புரிந்துகொள்வதற்கும் இந்நூல் பங்களிக்கக் கூடியதாகும். இந்நூல் யாப்பு உருவாக்கப்பட்ட அதன் ஆரம்ப தசாப்தத்தில் வரையப்பட்டதனால் பொதுச் சேவை விடயத்தில் தற்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி விளக்கவில்லை. எனினும் சிவில் சேவை தொடர்பான அரசியல் திட்ட ரீதியான ஆரம்ப ஏற்பாடுகளைப் புரிந்துகொள்வதற்கு இந்நூல் பெரிதும் பங்காற்றுகின்றது எனலாம்.

இந்தவகையில் முழுமையாக நோக்குகின்ற போது, சுதந்திர இலங்கையின் அரசியல் இயங்குநிலை அல்லது அரசியல் திட்ட பரிணாமத்தினை விளக்குவதற்கு இந்நூல் ஒரு அரிய நூலாக உள்ளது. இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தின் மைய அம்சங்களை வில்சன், வாசகர்களுக்கு வெறுமனே ஒப்புவிக்கவில்லை. அவர் ஒப்புவமை, உதாரணங்கள், எடுத்துக்காட்டுக்கள் மற்றும் விமர்சனங்கள் மூலம் அவற்றினைத் தெளிவாக விளக்கியுள்ளார். எனவேதான், இலங்கை அரசியல் பற்றிய தேடலில் ஈடுபடும் ஒருவருக்கு இந்நூல் பெரிதும் பங்களிக்கக் கூடியதாகும்.

## 8. முடிவுரை

கோல் மாதிரியிலான அரசியலமைப்புச் சட்டம் என்ற கோட்பாட்டு வரைபுச் சட்டகத்தினை அடிப்படையாகக் கொண்டு அதன் தராதரங்களை இலங்கையின் 1978 ஆம் ஆண்டைய அரசியல் திட்டம் பூர்த்தி செய்கின்றதா? என்பதனைக் கண்டறிவதற்காக அவ்வரசியல் திட்டத்தினை விபரண ரீதியான பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் இந்நூல், சட்டச் சிந்தனையின் விளைவாக இருக்கும் இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தினை அரசியல் விஞ்ஞான நோக்கில் நின்று பகுப்பாய்வு செய்துள்ளதுடன், இவ்வரசியல் திட்டம் அறிமுகம் செய்துள்ள அரசாங்க முறைமையில் உள்ள அபாயங்களையும் சிக்கல்களையும் அடையாளப்படுத்த முயற்சித்துள்ளது. இச்சிக்கல்களை வெற்றிகொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கியிருக்கும் இந்நூல், இந்நூல் வரையப்பட்ட காலகட்டத்தில் காணப்பட்ட உளப்பாங்கு மற்றும் எதிர்காலத்தில் ஏற்படத்தக்கதான விளைவுகளின் சாத்தியப்பாடுகளையும் பற்றி பரீட்சித்துள்ளது.

புதிய நிர்வாகத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் விபரிப்பதுடன் ட கோல்வாத அரசாங்க முறையுடன் இவ்வரசியல் திட்டத்தின் பல்வேறு அம்சங்களை ஒப்பீடு செய்யும் ஒரு முறையினையும் கையாண்டுள்ளது. எனினும் சில விமர்சனங்களுக்கு இடமளிக்கும் பாணியினையும் இந்நூல் எடுத்தியம் பியுள்ளது எனலாம். இந்நூலின் ஆசிரியர் தான் வாழ்ந்த கால கட்டத்தினை மையமாகக் கொண்டு எதிர்காலம் பற்றிய சில ஊகங்களுடன் தனது கருத்துக்களை முன்வைத்திருப்பது சில விடயங்களைப் பொறுத்து இக் காலத்திற்குப் பொருத்தமானதேயாயினும், சில விடயங்களின் இன்றைய நடைமுறையை அது முன்கூட்டியே ஆய்ந்து உணர்த்தவில்லை என்பது புலனாகின்றது. எவ்வாறாயினும் இந்நூல் இலங்கையின் அரசியல் பரப்பில் அதிகம் பேசப்படும் தற்போதய அரசியல் திட்டம் பற்றிய தெளிவான புரிதலுக்கும் அது பற்றிய விமர்சன ரீதியான நோக்கிற்கும் மகத்தான பங்களிப்பினைச் செய்யக் கூடியதாக உள்ளது என்றால் அது மிகையாகாது.